# வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

# 2014

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## (2014.01.01 - 2014.12.31 வரை)

**வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**
**'கொவிஜன மந்திரய',**
**இல. 80/5, ரஜமல்வத்தை ஒழுங்கை,**
**பத்தரமுல்லை.**

# உள்ளடக்கம்


வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு 7

நிர்வாகப் பிரிவு 9

திட்டமிடல் பிரிவு 15

அபிவிருத்திப் பிரிவு 17

கணக்குப் பிரிவு 20

சட்டப் பிரிவு 22

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் 23

இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு 43

# வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

## தொலைநோக்கு

“பல்லுயிர்த்தன்மை மற்றும் வனசீவராசிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசமொன்றைத் தோற்றுவித்தல்”


## பணிநோக்கு

‘‘விளைதிறனுடைய வனசீவராசிகள் பாதுகாப்பு வலையமைப்பொன்றை பேணுவதனூடாக, சிறந்த சகவாழ்வுடன் அனைத்து கால்நடைகளும் மனிதர்களும் வாழ்வதற்கு அவகாசமளித்தல்’’

### பிரதான பணிகள்

- 1937 இல. 02 ஐக் கொண்ட வனசீவராசிகள், தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- சர்வதேச வனசீவராசிகள் சமவாயத்தை நடைமுறைப்படுத்தல்.
- வனசீவராசிகளின் உரிமைகள் மற்றும் பல்லுயிர்த்ன்மையை பேணக்கூடிய வகையில் மனிதர்களினதும் ஏனைய அனைத்து சீவராசிகளினதும் வாழ்வுரிமையை பேணுவதற்காக கொள்கைகளைத் தயாரித்தலும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தலும்
- தேசிய பூங்கா அபிவிருத்தியின் மூலம் சுற்றாடல் சுற்றுலா தொழிலை விருத்தி செய்துகொள்ளும் பொருட்டு பங்களிப்பு நல்குதல்
- ஆண்டின் செயலாற்றுகை திட்டத்தில் அடங்கியுள்ள விடயங்களை மாதாந்தம், காலாண்டு, வருடாந்தம் மதிப்பிடுதல், செயற்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.
- வனசீவராசிகள் பொறுப்பு மற்றும் வனசீவராசிகளின் பாதுகாப்பு நிதியம் சம்பந்தமான பணிகளை செயற்படுத்தல் மற்றும் கண்காணித்தல்

**அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களும் நிறுவனங்களும்**



# நிர்வாகப் பிரிவு

## அறிமுகம்

நிர்வாகப் பிரிவின் கீழ் அமைச்சு, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு ஆகிய நிறுவகங்களின் பணிகளை மேற்கொள்கின்றன. இவ் அமைச்சின் வசமுள்ள மிகப் பெறுமதி வாய்ந்த வளமாக கருதப்படுகின்ற, மனிதவளங்களை முகாமைத்துவப்படுத்துவதன் ஊடாக அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குவது நிர்வாகப் பிரிவின் பணியாகும்.

## பணிப்பொறுப்புக்கள்

- அமைச்சினது பொது நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை பேணல்.
- அமைச்சின் அனைத்து அலுவலர்களினதும் தாபனப் பணிகளை மேற்கொள்ளல்.
- திணைக்களத்தின் தாபனப் பணிகளை உரியவாறு மேற்கொள்வதற்கு அமைச்சினால் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கல்.
- பாராளுமன்ற ஆலோசனைக் குழு, பாராளுமன்ற வினாக்கள் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளல்.
- அமைச்சின் மனிதவள அபிவிருத்திற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
- ‘வனதிவி செரிய’ இணைப்பிதழ் அச்சிடல் தொடர்பாக லேக்ஹவுஸ் நிறுவனத்துடனும், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துடனும் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்.

## 2014.12. 31 ஆந் திகதிக்கான மேம்பாடு

2013.01.28 ஆந் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு தாபிக்கப்பட்டமை பற்றி பிரசுரிக்கப்பட்ட இவ் அமைச்சுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் எண்ணிக்கை 81 ஆகும். எனினும் 2014.12.31 ஆந் திகதியளவில் 74 அலுவலர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

- 2014.12.31 ஆந் திகதி சம்பள ஆண்டேற்றம் பெறுவதற்கு உரித்தான 52 அலுவலர்களுக்கு சம்பள ஆண்டேற்றங்கள் செலுத்தப்பட்டுள்ளன.
- 4 அலுவலகப் பணியாளர் பதவிகள் மற்றும் 4 சாரதி பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
- பொறியியலாளர் ஒருவரின் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளதுடன் முகாமைத்துவ சேவை அலுவலர் ஒருவரினதும், சாரதி ஒருவரினதும், அலுவலகப் பணியாளர்கள் இருவரினதும் சேவையை நிரந்தரமாக்குவது தொடர்பாக முன்னளிக்கப்பட்டுள்ளது.
- வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் நிர்வாகப் பிரிவிற்கு கிடைக்கப் பெறுகின்ற அனைத்து பதிவுத் தபாலிலிடப்பட்ட மற்றும் சாதாரண கடிதங்கள் என்பன தாமதமின்றி குறித்த நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளிடையே பகிர்ந்தளிக்கப் படுகின்றன.
- கௌரவ அமைச்சரினதும் அமைச்சின் 12 பதவிநிலை அலுவலர்களினதும் தொலைபேசிக் கட்டணப் பட்டியல்கள் மற்றும் இரண்டு பொதுத் தொலைபேசிகளின் கட்டணப் பட்டியல்கள் மற்றும் அமைச்சரின் ஆளணியினரின் 30 தொலைபேசிகளின் கட்டணப் பட்டியல்கள் என்பன துரிதமாக செலுத்தப்பட்டுள்ளன.
- அலுவலர்களின் விடுமுறை விபரங்கள் அவர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.
- 2014.03.19 ஆந் திகதி வனசீவராசி வளங்கள் பாதுகாப்புப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட 4 பிரேரணைகளுக்கு விடையளிக்கப்பட்டதுடன், 2014.10.10 ஆந் திகதி வனசீவராசி வளங்கள் பாதுகாப்புப் பணிகள் தொடர்பாக ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட 18 பிரேரணைகள் தொடர்பாக விடையளிக்கப்பட்டன.
- 16 பாராளுமன்ற வினாக்களுக்கு விடையளிக்கப்பட்டன.
- 10 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- ‘வனதிவி செரிய’ மாதாந்த இணைப்பிதழ் 2013 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2014 ஜூலை 11 ஆந் திகதி இணைப்பிதழின் ஓராண்டு பூர்த்தியின் நிமித்தம் வினா விடைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வ/ப ஐக்கிய செய்தித்தாள் கம்பனியின் அனுசரணையில் பரிசில்கள் வழங்கப்பட்டன. 2014 சனவரி மாதத்தில் இருந்து டிசெம்பர் மாதம் வரை மாதாந்தம் ‘வனதிவி செரிய’ இணைப்பிதழ் வெளியிடப்பட்டது.
- ‘வனதிவி செரிய’ இணைப்பிதழ் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து Hibright தாளில் இனிவரும் இதழ்களை வெளியிடுவதற்கு தீர்மானித்துள்ளதுடன், 2014 செப்ரெம்பர் மாதத்தில் இருந்து ஓராண்டில் காலாண்டுக்கு ஒரு முறை தமிழ் மொழிபெயர்ப்பு இதழ்களும் அச்சிடப்படவுள்ளன.

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 14 ஆட்சேர்ப்பு நடைமுறைகளுள் 09 தொடர்பாக பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.
- நிர்வாகப் பிரிவில் நூலகமொன்று ஆரமப்பிக்கப்பட்டுள்ளதுடன், இந் நூலகத்திற்கு தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கற் சேவை சபை, ஆசியா மன்றம், தனியார் புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் மற்றும் கல்வி புத்தக ஆலோசனை சபை ஆகியவற்றில் இருந்து புத்தகங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. வாரத்தில் வெள்ளிக்கிழமை ஆளணியினருக்கு புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. அதனூடாக அவர்களது அறிவுத் திறனையும், வாசிப்புத் திறனையும் அதிகரித்துக்கொள்வதற்கு வாய்ப்புக் கிட்டும்.
- கொவிஜன மந்திரய வளவில் வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சுக்குரிய பகுதியில் டெங்கு நுளம்பு பெருக்கத்தினை முற்றுமுழுதாக இல்லாதொழிப்பது தொடர்பாக இவ் அமைச்சின் மூலம் டெங்கு தடுப்பு வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் அமைச்சின் அலுவலர்கள் குழுக்களாக இணைந்து, இருவாரங்களுக்கு ஒரு முறை அந் நிலப்பகுதியை பரிசோதித்தல் மற்றும் ட்ரன்க்ஸ் பகீரியாக்கொல்லி, களுதெல், நுளம்புக் கொல்லி BTI தெளித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர். 2014 ஆம் ஆண்டில் 32 தடவைகள் அமைச்சினால் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள டெங்கு கட்டுப்பாட்டு அலகு மற்றும் விவசாயத் திணைக்களத்துக்கு பிரதியிட்டு, சுகாதார அமைச்சுக்கு டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான அறிக்கை மாதாந்தம் முன்னளிக்கப்பட்டுள்ளன.

## மனித வளங்களின் அபிவிருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட பயிற்சிகள்

பயிற்சி மற்றும் திறன் விருத்தி தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு பத்து இலட்சம் ரூபா (ரூ. 1,000,000.00) ஆக இருந்ததுடன் 2014.12.31 திகதியளவில் அதில் ரூபா 920,358.20 செலவிடப்பட்டு பல்வேறு பயிற்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் அமைச்சின் அலுவலர்கள் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

| பயிற்சி | பயிற்சியை வழங்கிய நிறுவனம் | பங்குபற்றிய அலுவலர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. சம்பள மாற்றியமைப்பு தொடர்பான இருநாள் செயலமர்வு | திறன் விருத்தி நிதியம் | 03 |
| 2. 2014 பாதீட்டு வரித் திருத்த முன்மொழிவு சம்பந்தமான பயிற்சி | திறன் விருத்தி நிதியம் | 01 |
| 3. சிறாப்பரின் பணி மற்றும் பொறுப்பு | திறன் விருத்தி நிதியம் | 01 |
| 4. போக்குவரத்து முகாமைத்துவம் | CETRAC | 02 |
| 5. தொழிற் திறன் மேம்பாடிற்கான அலுவலக உதவியாளர்களின் பணிகள் | தேசிய ஊழியர் கல்வி நிறுவகம் | 03 |
| 6. ஆங்கில மொழிச் சான்றிதழ் பாடநெறி | திறன் விருத்தி நிதியம் | 03 |
| 7. வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு தொடர்பான வெளிக்கள பயிற்சி செயலமர்வு | வில்பத்து தேசிய பூங்கா | 40 |
| 8. மைக்ரோசொப்ட் ஓபீஸ் | இலங்கை அச்சக நிறுவகம் | 02 |
| 9. ஆங்கில மொழிச் சான்றிதழ் பாடநெறி | திறன் விருத்தி நிதியம் . | 02 |
| 10. போக்குவரத்து முகாமைத்துவம் | திறன் விருத்தி நிதியம் | 01 |
| 11. நிதிப் பிரமாணங்கள் மற்றும் பெறுகை தொடர்பான பயிற்சி | வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு | 20 |

| பயிற்சி | பயிற்சியை வழங்கிய நிறுவனம் | பங்குபற். எண்ணி. |
|---|---|---|
| 12. ஒழுக்காற்று பரிசீலனை மேற்கொள்ளல் | திறன் விருத்தி நிதியம் | 02 |
| 13. புதிய அலுவலக உதவியாளர், சாரதிகள் தொடர்பான பயிற்சி | வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு | 08 |
| 14. அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்களின் பொறுப்பு மற்றும் பணிகள் | திறன் விருத்தி நிதியம் | 01 |
| 15. அரசாங்க பெறுகை நடைமுறை | திறன் விருத்தி நிதியம் | 01 |
| 16. சுற்றாடல் தாக்கங்களின் மதிப்பீடு தொடர்பான பயிற்சி | இலங்கை பொறியியல் நிறுவகம் | 01 |
| 17. இலங்கை கணக்காய்வு நியமங்கள் தொடர்பான செயலமர்வு | இலங்கை பட்டயக் கணக்காளர் பயிற்சி நிறுவகம் | 01 |
| 18. வரி தொடர்பான பயிற்சி | இலங்கை கணக்காளர் தொழிநுட்ப சங்கம் | 01 |
| 19 இலங்கை கணினித் தேர்ச்சி . அரையாண்டு சான்றிதழ் பாடநெறி | தேசிய பயிலுநர், தொழிநுட்ப பயிற்சி அதிகார சபை | 03 |
| 20. நி.பி. 104 இன் பிரகாரம் பரிசீலனை மேற்கொள்ளல் | திறன் விருத்தி நிதியம் | 05 |
| 21. தாபனவிதிக்கோவை | வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு | 13 |
| 22. சம்ம்பள மாற்றியமைத்தல் | வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு | 07 |
| 23. பணிமேம்பாடு தொடர்பான பயிற்சி பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | 04 |
| 24. சுற்றாடல் தாக்கங்களின் மதிப்பீடு தொடர்பான பயிற்சி | இலங்கை பொறியியல் நிறுவகம் | 01 |
| 25. மாதுருஓயா பயிற்சி செயலமர்வு | விசேட முகாம் பாடசாலை மாதுருஓயா | 20 |
| 26. சுப்பர் மெப் GIS பயிற்சித்திட்டம் (Super Map GIS Training Programme) | காட்டக் ஜீஎல்எஸ் லிமிட்டட் Katak GISLtd | 03 |

| பயிற்சி | பயிற்சியை வழங்கிய நிறுவனம் | பங்குபற்றிய அலுவலர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 27. சம்பள மாற்றியமைத்தல் | திறன் விருத்தி நிதியம் | 02 |
| 28. கணக்குகளை முறைப்படி பேணல் | திறன் விருத்தி நிதியம் | 01 |
| 29. அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் | திறன் விருத்தி நிதியம் | 05 |
| 30. மனிதவள முகாமைத்துவம் | பல்கலைக்கழகம், கொழும்பு | 01 |
| 31. வரி தொடர்பான பாடநெறி | இலங்கை கணக்கீட்டு கற்கை நிறுவகம் | 01 |
| 32. இலங்கை கணக்காய்வு நியமங்கள் தொடர்பான செயலமர்வு | இலங்கை பட்டயக் கணக்காளர் கற்கை நிறுவகம் | 01 |

# திட்டமிடல் பிரிவு

## அறிமுகம்

அமைச்சின் அபிவிருத்திப் பணிகள் இப்பிரிவின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கேற்ப தேசிய தேவைப்பாடுகளை இனங்கண்டு, அபிவிருத்திப் பணிகள் திட்டமிடப்படுவதுடன் அத்திட்டங்களை அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் நாடு பூராவும் நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைவாக அதன் இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டும், மஹிந்த சிந்தனை தூரநோக்கிற்கு அமைய எதிர்காலத்தில் அடைந்துகொள்ள வேண்டிய குறிக்கோள்ளை நோக்கியதான செயற்பாடுளை திட்டமிடல் மற்றும் அச் செயற்பாடுகளில் ஈடுபடல் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## பணிப்பொறுப்புக்கள்

- அமைச்சின் அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல்.
- செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைய அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே இணைப்புப் பணிகளை மேற்கொண்டு மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முழுமையான மேம்பாட்டை அடைந்துகொள்ளல், தகவல்களை மீளாய்வு செய்து மேம்பாட்டு மீளாய்வு அறிக்கை தயாரித்தல் மற்றும் மேம்பாட்டு மீளாய்வு கூட்டங்களை நடத்துதல்
- இவ் அமைச்சுடன் இணைந்த திணைக்களத்தின் மூலதனச் செலவின மதிப்பீடு தயாரிப்பதற்கான ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அந்நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்ளை கண்காணித்தலும் செயற்படுத்தலும்.
- இவ் அமைச்சுடன் இணைந்த திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரேரணைகள் தயாரிக்கும் போது தேவையான ஆலோசனைகளை வழங்குவதுடன் அவற்றை நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்
- மஹிந்த சிந்தனை தூரநோக்கிற்கு அமைய மேம்பாட்டு மீளாய்வு செய்வதற்குத் தேவையான செயலாற்றுகைச் சுட்டியைத் தயாரித்தல்
- ரூபா 50 மில்லியன் தொகையை விட அதிகமான செயற்திட்டங்களின் மேம்பாடு தொடர்பாக நிதி அமைச்சுக்கு அறிக்கையிடல்
- வரவு செலவுத்திட்டத்தை செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கும் தருணத்தில் சமர்ப்பிக்கக் கூடியதாக அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.
- ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை தயாரித்தல்
- சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, பிற நேர் அமைச்சுக்கள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றுக்கு போதிய தகவல்களை வழங்குதல்
- அமைச்சுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் இற்றைவரையாக்கல்.

## 2014.12. 31 ஆந் திகதிக்கான மேம்பாடு

- 2014 ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களம் மற்றும் நிறுவகங்களின் காலாண்டு மேம்பாட்டுக் கூட்டம் நடாத்தப்பட்டது.
- ரூபா 50 மில்லியனுக்கு அதிகமான செயற்திட்டங்களின் மேம்பாடு நிதி அமைச்சுக்கு முன்னளிக்கப்பட்டுள்ளது.
- அமைச்சின் செலவினத் தலைப்பு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் 2014 ஆண்டின் மேம்பாடு மற்றும் அடுத்துவரும் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டங்கள் அடங்குகின்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு முன்னளிக்கப்பட்டுள்ளது.
- 2014 ஆண்டில் குருணாகலை மாவட்டத்தில் நடைபெற்ற தெயட்ட கிருல தேசிய அபிவிருத்தி கண்காட்சியின் ஒருங்கிணைப்புப் பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன.
- 2013 ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை தயாரித்து உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, பிற நேர் அமைச்சுக்கள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றுக்கு போதிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

# அபிவிருத்திப் பிரிவு

## அறிமுகம்

இப்பிரிவின் மூலம் வனசீவராசிகள் அபிவிருத்தி பணிகளை முறைசார்ந்தவாறும் விளைதிறனானவாறும் செயற்படுத்தல் மற்றும் அமைச்சின் பேணல் பணிகளை சிறப்பாக ஒருங்கிணைத்தல்

## பணிப்பொறுப்புக்கள்

- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு உரியதான பணிளை நடைமுறைப்படுத்தும் போது தேவையான கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
- வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு சம்பந்தமாக அமைச்சுக்கு கிடைக்கப்பெறும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
- சனாதிபதி செயலகத்திற்குக் கிடைக்கப் பெறுகின்ற வனசீவராசிகள் விடயம் சம்பந்தமான பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய நிறுவனங்களுக்கு அனுப்புதல்
- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள், புதைபொருள் காப்பிடம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் காப்பிடத்தினுள் வசிக்கும் மக்களின் பிரச்சினை என்பன தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு சொந்தமான காணி சுவீகரிப்பு மற்றும் சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக நட்டஈடு வழங்குவதற்கு சிபார்சு செய்தல்.
- தேசிய வனப்பூங்காக்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள், மின்வேலிகள் அமைத்தல், காட்டு யானைகள் தடுப்பு நிலையம் அமைத்தல், வசிப்பிடங்களை வளப்படுத்தல் ஆகியனவற்றின் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகள்.
- வனசீவராசிகள் தொடர்பான பணிகளுக்குரிய மற்றும் அமைச்சின் விடயப் பணிகளுக்கு ஏற்புடையதான ஏனைய அமைச்சுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான அவதானிப்புக்களை சமர்ப்பித்தல்
- காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு உட்படும் மக்களுக்காகத் தயாரிக்கப்பட்ட உத்தேச காப்புறுதித் திட்டம் தொடர்பாக கொள்கைசார் தீர்மானங்களை எடுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கல்
- விக்டோரியா, ரன்தெனிகல, ரன்டம்பே, அபயபூமி எல்லைகளில் மீள அடையாளமிடல்.
- காட்டு யானைக் குட்டிகள் மற்றும் ஏனைய வனசீவராசி விலங்குகள் தொடர்பான கோரிக்கைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல்
- காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு உட்பட்டு உயிரிழக்கும் மற்றும் ஏனைய பாதிப்புக்கள் தொடர்பாக நட்டஈடு வழங்கும் நடவடிக்கை போதிய கொள்கைசார் தீர்மானங்களை எடுத்தல்
- குரங்குகள் மற்றும்ம் மந்திகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்த்துவைப்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் சிபார்சுகளை வழங்கல்
- யானைகளின் பாதுகாப்பு தொடர்பான பணிகள்.

- நீர் வள முகாமைத்துவ பணிகள் தொடர்பாக குறித்த நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து பணிபுரிதல்
- இடர் முகாமைத்துவ திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமான செயற்திட்டம் 2014–2018 அமைச்சின் கண்காணிப்பின் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்துதல்
- அமைச்சின் அனைத்துவித பேணல்சார்ந்த பணிகளை மேற்கொள்ளலும் அது தொடர்பாக தேவைப்படும் மதிப்பீடுகளை தயாரித்தல், சிபார்சு செய்தல், மேற்பார்வை மற்றும் கொடுப்பனவு தொடர்பான சிபார்சு செய்தல்.
- அமைச்சு கட்டிடத்தின் சிறு சிறு பேணல் பணிகளுக்காக கட்டுநிதி முற்பணம் வழங்குதல்
- அமைச்சிற்குரிய வளிச்சீராக்கி, தொலைநகல் (Fax) இயந்திரம், நிழற்பிரதி இயந்திரம் மற்றும் கணனிகளின் பேணல் பணிகளை மேற்கொள்ளல்
- அமைச்சின் இணையத்தள தரவுகளை இற்றைவரையாக்கல்
- அமைச்சின் அனைத்து பிரிவுகளுக்கும் Local Area Net work முறைமையை செயற்படுத்துதல் மற்றும் இணைய வசதிகளை வழங்குதல்

## 2014.12. 31 ஆந் திகதிக்கான மேம்பாடு

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற 31 பொது மக்களின் முறைப்பாடுகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு அவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
- சனாதிபதி செயலகத்திற்குக் கிடைக்கப் பெற்ற் வனசீவராசிகள் விடயம் சம்பந்தமான 289 பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு அவை தொடர்பாக அந் நிறுவனங்களினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் தொடர்பில் வெளி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் இடையில் நிலவிய 7 பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
- தேசிய வனப் பூங்காக்களில் குளங்கள் புனரமைப்புக்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டதன் மூலம் 15 மதிப்பீடுகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.
- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தும் நிமித்தம் தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சினால் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பாதுகாப்பு விடயம் பற்றி ஏனைய அமைச்சுகளினால் முன்வைக்கப்பட்டிருந்த 02 அமைச்சரவை பத்திரங்கள் தொடர்பான அவதானிப்புகள் முன்னளிக்கப்பட்டுள்ளன.
- காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் மக்களுக்காகத் தயாரிக்கப்படுகின்ற காப்புறுதித் திட்டம் பற்றி பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களம், வரவுசெலவுத்திட்ட திணைக்களம், கமக்காரர் காப்புறுதிச் சபை என்பவற்றுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு உரிய விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

- நீர் வளங்கள் முகாமைத்துவ பணிகள் தொடர்பாக குறித்த நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகின்ற கூட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் களப் பரிசீலனைகள் ஆகியவற்றில் கலந்து கொண்டுள்ளனர்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு உரியதான 09 காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.
- வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சுக்குரிய அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்னளிக்கப்பட்டுள்ளது.
- நடப்பாண்டில் அமைச்சின் அனைத்துவித பேணல் நடவடிக்கைகள் தொடர்பாக ரூபா 2,437,042.17 செலவிடப்பட்டுள்ளதுடன் மதிப்பீடுகளைத் தயாரித்தல், சிபார்சு செய்தல், நிர்மாணிப்பு நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் குறித்த கொடுப்பனவுகள் தொடர்பான அங்கீகாரம் வழங்கல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- அமைச்சின் கட்டிடத்தில் மின்சாரம், நீர் விநியோகம், துப்புரவேற்பாடு முதலிய துரிதமாக மேற்கொள்ள வேண்டிய சிறு பேணல் பணிகள் தொடர்பில் ரூபா 5375.00 செலவிடப்பட்டுள்ளது.
- இந்த அமைச்சின் அலுவலக அறைகளுக்கு 23 குளிரூட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் குளிரூட்டிகள் ஒரு வருடத்திற்கு மூன்று தடவைகள் சேவிஸ் பண்ணப்படுகின்றன. சேவை ஒப்பந்தம் தொடர்பாக இவ் ஆண்டில் ரூபா 154,633.92 தொகை செலவிடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக அத் திருத்தங்கள் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பாக ரூபா 33,986.40 செலவிடப்பட்டுள்ளது.
- 11 தொலைநகல் (Fax ) இயந்திரங்களை சேவிஸ் பண்ணுவதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 62,014.40 தொகை இதுவரை செலுத்தப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கு 04 தடவைகள் சேவிஸ் பண்ணப்படுகின்றன.
- அமைச்சின் 09 நிழற் பிரதியெடுக்கும் இயந்திரங்களின் சேவை ஒப்பந்தத்திற்கு 2014 ஆம் ஆண்டில் ரூபா 118,916.40 தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கு 04 தடவைகள் சேவிஸ் பண்ணப்படுகின்றன.
- கணனிகளின் பழுபார்ப்புப் பணிகள் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மாதாந்தம் ரூபா 3,085.69 தொகையைச் செலவிட்டு அமைச்சின் அலுவலர்களுக்கு 15 மின்னஞ்சல் முகவரிகள் வழங்கப்பட்டன. அது தொடர்பாக வருடாந்தம் ரூபா 37,028.28 செலவிடப்படுகின்றது.

# கணக்குப் பிரிவு

## அறிமுகம்

அமைச்சின் கணக்குப் பிரிவு 02 பிரதான பிரிவுளை உள்ளடக்கியுள்ளது. அதாவது நிதிப் பிரிவு மற்றும் கொடுப்பனவு, பெறுகைப் பிரிவு என்பனவாகும். நிதிப் பிரிவினால், ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை தயாரித்தல், ஒதுக்கீட்டு கணக்கு தயாரித்தல், கட்டுநிதித் தேவைப்பாடுகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் திறைசேரியுடன் உரிய இணைப்புப் பணிகளை மேற்கொள்ளல் என்பன இடம்பெறுகின்றன. பெறுகைப் பிரிவு, அமைச்சினதும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களினதும் பெறுகை சார்ந்த பணிகளை நிறைவேற்றல், அது தொடர்பான கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதுடன் அமைச்சின் அனைத்து கொடுப்பனவு சார் பணிகளையும் மேற்கொள்கின்றது.

## பணிப்பொறுப்பு

- ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள செலவினங்களை முகாமைத்துவப்படுத்தல் தொடர்பான நிதிப் பிரமாணங்கள், கட்டளைச் சட்டங்கள், சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் ஆகியவற்றுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு நாளாந்த, மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகளை உரியவாறு பேணல்.
- வள முகமைத்துவம்
- நடப்பாண்டின் செலவின மற்றும் வருமான மதிப்பீடு தயாரித்தல்
- அமைச்சுக்கு உரியதான வேதனம், கடன் முற்பணம், பொதுவைப்பு ஆகியன உட்பட அனைத்து மூலதன மற்றும் மீண்டுவரும் கொடுப்பனவுப் பணிகளை மேற்கொள்ளலும், செலவின முகாமைப்படுத்தலும்.
- அமைச்சினதும், அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினதும் பெறுகைக்குழு நியமித்தல் மற்றும் பெறுகைசார் பணிகளை நிறைவேற்றல் மற்றும் அவற்றைக் கண்காணித்தல்
- அமைச்சினதும், அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களினதும் உரிய அரசாங்க கணக்குத் தெரிவுக் குழுவுக்கும், அரசாங்க வியாபாரத் தெரிவுக்குழுவுக்கும் உரிய பணிளை நிறவேற்றல்
- அமைச்சினது மாதாந்த, வருடாந்த கணக்குகளைத் தயாரித்தல், அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களினது வருடாந்த கணக்குகள் மற்றும் அறிக்கைகளை கண்காணித்தல்.
- அரசாங்க அலுவலர்களின் முற்பண பீ கணக்கிலிருந்து கடன் வழங்கல், அவற்றை உரியவாறு அறவிடல் மற்றும் அதற்கு உரியதான கணக்குகளைப் பேணல்

# 2014.12.31 ஆம் திகதிக்கான நிதிசார் முன்னேற்றம்

**நிகழ்ச்சித்திட்டம் 01 - செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**
**அமைச்சரின் அலுவலகம்**

| விபரம் | 2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு (ரூ.மில்.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ.மில்.) | 2014.12.31 இல் மொத்தச் செலவு (ரூ.மில்.) | விகிதம் (%) |
|---|---|---|---|---|
| | | | | |
| **மீண்டெழும் செலவினம்** | **27.01** | **28.89** | **28.09** | **97** |
| தனியாள் வேதனாதிகள் | 9.20 | 9.19 | 8.53 | 93 |
| பிரயாணச் செலவுகள் | 1.50 | 1.89 | 1.85 | 98 |
| வழங்கல்கள் | 7.51 | 6.58 | 6.52 | 99 |
| பராமரிப்புச் செலவுகள் | 4.55 | 4.97 | 4.95 | 100 |
| சேவைகள் | 4.25 | 6.26 | 6.24 | 100 |
| **மூலதனச் செலவினம்** | **5.40** | **14.50** | **11.43** | **79** |
| மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பும் மேம்பாடும் | 2.40 | 2.40 | 2.3 | 96 |
| மூலதனச் சொத்துக்களின் கொள்ளல் | 3.00 | 12.10 | 9.13 | 75 |
| **மொத்தச் செலவு** | **32.41** | **43.39** | **39.52** | **91** |

**நிகழ்ச்சித்திட்டம் 01 - செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**
**செயற்திட்டம் 02 - தாபன நிருவாக சேவைகள்**

| விபரம் | 2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு (ரூ.மில்.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ.மில்.) | 2014.12.31 இல் மொத்தச் செலவு (ரூ.மில்.) | விகிதம் (%) |
|---|---|---|---|---|
| | | | | |
| **மீண்டெழும் செலவினம்** | **65.71** | **53.41** | **53.05** | 99 |
| தனியாள் வேதனாதிகள் | 41.40 | 29.79 | 29.79 | 100 |
| பிரயாணச் செலவுகள் | 1.30 | 1.30 | 1.22 | 94 |
| வழங்கல்கள் | 8.61 | 9.03 | 9.00 | 100 |
| பராமரிப்புச் செலவுகள் | 6.20 | 5.99 | 5.83 | 97 |
| சேவைகள் | 7.20 | 6.83 | 6.75 | 99 |
| அரச கடன் வட்டி | 1.00 | 0.47 | 0.46 | 98 |
| மூலதனச் செலவினம் | **8.95** | **8.95** | **7.66** | 86 |
| மூலதனச் சொத்துக்களின் புனமைப்பும் மேம்படுத்தலும் | 2.95 | 3.4 | 3.15 | 93 |
| மூலதனச் சொத்துக்களின் கொள்ளல் | 5.00 | 4.55 | 3.59 | 79 |
| திறன் விருத்தி | 1.00 | 1.00 | 0.92 | 92 |
| **மொத்தச் செலவு** | **74.66** | **62.36** | **60.71** | **97** |

# சட்டப் பிரிவு

## பணிப்பொறுப்பு

வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவகங்கள் தொடர்பில் அமைச்சினால் நிறைவேற்ற வேண்டிய சட்ட விடயங்களைக் கண்காணிக்கும் பணி இந்தச் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- 1937 இன் 07 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புச் கட்டளைச் (469 ஆம் அதிகாரம்) சட்டத்தை நடைமுறைப்படுத்துதல். கண்காணித்தல் மற்றும் அந்தச் சட்டங்களுக்குத் தேவையான ஒழுங்கு விதிகள், கட்டளைகள் மற்றும் திருத்தங்கள் என்பன தொடர்பான ஆலோசனைப் பணிகளை நிறைவேற்றுதல் ஆகிய விடயங்கள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- பல்வேறுவித தாவரங்கள் மற்றும் விலங்குகள் தொடர்பிலான செயற்பாடுகளை கட்டுப்படுத்தும்போது ஒழுங்குவிதிகளை தயாரித்தல்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் தாமதமாகும் சட்ட விடயங்கள் பற்றி, அமைச்சுக்கு அறியக்கிடைக்கின்ற முறைப்பாடுகளை விசாரித்து அதனை துரிதமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அமைச்சு மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் சம்பந்தமான வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்கத்துடன் நடத்தப்படும் அறிவுரை ரீதியான கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளல், போதிய அவதானிப்புக்ளைத் தயாரித்து சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- மேலும் சட்ட ஆலோசனைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஏனைய வழக்கு விடயங்கள் என்பவற்றின் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளை முன்னெடுத்தல்
- தேசிய காப்பிடம், தடை செய்யப்பட்டுள்ள காடு, தேசிய வனப்பூங்கா, இயற்கை காப்பிடம், வன நுழைவு, பாதுகாப்பான இடங்கள், சமுத்திர காப்பிடப் பிரதேசங்கள், எல்லைகளுக்கிடையிலான வலயங்கள் மற்றும் அபய பூமி என்பனவற்றின் எல்லைகளை சரியான இனங்காண்பதற்கு உரிய நடவடிக்கைகளை வடிவமைப்பதில் திணைக்களத்துக்கு ஒத்துழைப்பு நல்குதல்.
- அமைச்சுக்கும் திணைக்களத்துக்கும் எதிராகவும், திணைக்களத்தினாலும் தொடரப்பட்ட வழக்குகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன், அவ் வழக்குகள் தொடர்பாக கண்காணிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
- பொதுமக்களினால், விலங்குகள் மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரம்கொண்ட பணிகள் தொடர்பாகசெய்யப்படுகின்ற முறைப்பாடுகளை விசாரிப்பதும் இப்பிரிவின் பண்ப்பொறுப்பாகும். பொதுமக்களுக்கு கட்டளைச் சட்டத்தின் பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

# வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

## அறிமுகம்



இலங்கையின் பாரிய பல்லுயிர்த்தன்மைக்கு கட்டியம் கூறுகின்ற இவ்வாறான தாவரங்கள் மற்றும் கால்நடைகளையும் மனிதர்கள் வாழ்கின்ற சுற்றாடலையும் பாதுகாக்க வேண்டிய பிரதான பொறுப்பு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1949 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதான கடப்பாடு என்னவெனில், இலங்கையின் வனசீவராசி வளங்களைப் பாதுகாக்கப்பது ஆகும். அதற்கமைய இலங்கையின் அனைத்து ஆற்று மூலங்களையும் விவசாயத்துறை மற்றும் மின்சார உருவாக்கம் தொடர்பாக நீரை வழங்குகின்ற பாரியவிலான நீர்த்தேக்கங்கள் உட்பட 40 நீர்த்தேக்கங்களின் நீரேந்துப் பகுதிகள் என்பன வனசீவராசிகள் காப்பிட வலையமைப்பின் ஊடாகவே பாதுகாக்கப்படுகின்றன. இந் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 13% விஞ்சிய வனசீவராசிகள் காப்பிட வலையமைப்பு முகாமைப்படுத்தப்படும் போது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திடமே அதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது. அவ் வனசீவராசிகள் காப்பிட வலையமைப்பு பல்வேறு பாதுகாப்பு மட்டங்களின் கீழ் பிரசகடனப்படுத்தப்பட்ட வனசீவராசி காப்பிடங்களை உள்ளடக்கியுள்ளன.

## தொலைநோக்கு

‘‘இன்றைய மற்றும் நாளைய சந்ததியினருக்காக வன வளங்களை நீண்ட காலத்திற்குப் பாதுகாப்பதாகும்’’

## பணிநோக்கு

‘‘அனைவரும் ஒன்றிணைந்து தொழில் சார்ந்த ஒரு முகாமைத்துவத்தினூடாக வன சீவராசிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதாகும்’’

## பணிப்பொறுப்பு

- ''அனைத்து பூகோள, காலநிலை மற்றும் பல்லினத்தன்மை வலையங்களினுள் வனசீவராசி வளங்களை போதியளவில் உள்ளடக்கியுள்ள இலங்கை வனசீவராசிகள் காப்பிட வலையமைப்பை தாபித்தலின் மூலம் அவற்றின் ஸ்திரத்தன்மையை பேணல்

- விவசாயத்துறை, நீர்மின்சார உருவாக்கம் தொடர்பாக நீர் வழங்குகின்ற பாரியளவிலான நீர்த்தேங்களின் நீரேந்துப் பிரதேசங்களை பாதுகாத்தல், சமய மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பேணல், தனித்துவமான அரிதான வனசீவராசிகளை பாதுகாத்தல், விசேட சுற்றாடல் முறைமைகளை பாதுகாத்தல் ஆகிய விசேட நோக்கங்களைக் கொண்டுள்ள வனசீவராசிகள் காப்பிடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு வனசீவராசிகள் காப்பிட வலைமைப்பை உரியவாறு முகாமைப்படுத்தல்.

- மலடாக கூடிய அச்சுறுதலுக்கு ஆளாகியுள்ள தேசிய வனசீவராசிகளின் பாதுகாப்பு தொடர்பாக தகுந்த செயன்முறைகளை கையாண்டு விசேட செயற்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவ்வுயிரினங்களின் நீண்டகால இருப்புக்கு உத்தரவாதமளித்தல்

- வனசீவராசிகள் காப்பிடங்களின் வெளிப் பிரதேசங்களில் பாதுகாப்பாக வாழக்கூடியவாறு வனசீவராசிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

- தற்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தேசிய வனசீவராசிகள் கொள்கை மற்றும் சட்டத்தை விளைதிறன் வாய்ந்த முறையில் கையாளல்

- இலங்கை அரசாங்கத்தினால் கையொப்பமிடப்பட்டுள்ள வனசீவராசிகள் பாதுகாப்பு குறித்து மலடாகக் கூடிய வாய்ப்புள்ள கால்நடைகள் வியாபாரம் தொடர்பான சமவாயம் (CITES), சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரலிப்பு பிரதேசங்கள் தொடர்பான சமவாயம் (Ramsar) மற்றும் குடிபெயரும் மிருகங்களின் பாதுகாப்பு தொடர்பான சமவாயம் (CMS—Bonn) ஆகிய சர்வதேச சமவாயங்களின் செயற்பாடு தொடர;பாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய செயற்படுதல்

- வனசீவராசிகள் காப்பிடங்களுக்கு அருகே சுற்றாடல் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு அதன் பங்களிப்பை வழங்க முடியும்

- வனசீவராசி வளங்களின் பாதுகாப்பு மற்றும் விஞ்ஞான ரீதியிலான முகாமைத்துவம் தொடர்பான தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளல்

- இயற்கை வளங்களை பாதுகாப்பதை நோக்காகக் கொண்டுள்ள பிற நிறுவனங்களுடன் ஒத்தழைப்புடனான அன்னியோன்ய புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதனூடாக பாதுகாப்பு செயற்பாடுகளை வலுப்படுத்தல்

- சாதாரணப் பொதுமக்கள், அரச அலுவலர்கள் ஏனைய குழுக்கள் ஆகியோருக்கிடையே வனசீவராசிகள் பாதுகாப்பினை விஸ்தரிப்பதனூடாக அவர்களின் பங்களிப்புக்களை பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்ட வனசீவராசிகள் பாதுகாப்பு கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- வனசீவராசிகள் காப்பிடங்களுக்குள் இயற்கை வளங்களைச் சுற்றி வாழ்விடங்கள் குறைக்கப்பட வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு சமூக பொருளாதார நிழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல்.

# அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

## 1. மின்வேலிகள் அமைத்தல்

**நோக்கங்கள்**

- யானை – மனிதன் என்ற பிரச்சினையை ஓரளவுக்கு குறைத்தல்
- யானை – மனிதன் என்ற பிரச்சினையைக் குறைப்பது தொடர்பான மூலோபாய அபிவிருத்தியும் திறன்விருத்தியும்





| | | |
|---|---|---|
| **2014 ஆம் ஆண்டின் ஒதுக்கீடு** | **-** | **ரூ.மில். 250.00** |
| **நிதி முன்னேற்றம்** | **-** | **ரூ.மில். 195.34** |

**பௌதீக முன்னேற்றம்**

- காட்டு யானை – மனிதன் பிரச்சினையை குறைப்பது தொடர்பாக தேசிய திட்டமொன்று தயாரித்து முடிவுறுத்தப்பட்டுள்ளன.
- 300 கி.மீ நீளமான மின்சார வேலிகள் அமைப்பதற்கான பொருட்களை கொள்வனவுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.செய்து திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.
- மேலும், 547 கி.மீ நீளமான மின்வேலிகள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதில் 104 கி.மீ. நீளமான வேலிகள் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் நிர்மாணப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், எஞ்சியுள்ளவை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (மின்வேலிகள் அண்டியுள்ள பாதைகளில் பதிக்கும் பணிகளில் 50% முடிவுறுத்தப்பட்டுள்ளன.

## 2. ஹொரவபொத்தானை யானை பாதுகாப்பு வனப்பூங்கா நிர்மாணம்

கிராமங்களுக்குள் புகுந்து தொல்லை கொடுக்கின்ற காட்டு யானைகளை, யானைகள் சரணாலயங்களுக்கு விடுவிப்பதனூடாக யானை - மனிதன் பிரச்சினையை ஓரளவு குறைப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு 2012 ஆண்டின் திரட்டிய நிதியத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ் இது ஆரம்பிக்கப்பட்டது.

**நோக்கங்கள்**

- யானை – மனிதன் என்ற பிரச்சினை காணப்படுகின்ற பகுதிகளில் சமூகப் பொருளாதார அழிவுகளைக் குறைத்தல்
- யானை பாதுகாப்பு வனப்பூங்காக்களின் ஊடாக சுற்றாடல் சுற்றுலா சார்ந்த நடவடிக்கைகளை ஊக்குவித்தல்
- யானை பாதுகாப்பு வனப்பூங்காவக்களின் ஊடாக அப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு வருமானமீட்டும் வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

**2014 ஆம் ஆண்டின் ஒதுக்கீடு - ரூ.பா 30.00 மில்லியன்**

**நிதி முன்னேற்றம் - ரூ.பா 24.21 மில்லியன்**

**முழு பௌதீக முன்னேற்றம் (2012 - 2014)**

- 15 கி.மீ நீளமான மின்சார வேலி நிர்மாணிப்புப் பணி நிறைவடைந்துள்ளது.
- விசேடமாக வடிவமைக்கப்பட்ட மின்சார வேலி நிர்மாணிப்புப் பணி நிறைவடைந்துள்ளதுடன், அதற்காக 2,098 கொன்கிறீட் கம்பங்கள் நடப்பட்டுள்ளன.
- 93 சப்பாத்துப் பாலங்களின் நிர்மாணிப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 28 சப்பாத்துப் பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.
- 03 வாவிகள் நிர்மாணிக்கப்பட்டு முடிந்துள்ளன
- அலுவலகம் மற்றும் 02 விடுதி கட்டிட நிர்மாணிப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன.





## 3. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினை வலுவூட்டுதல்

வனசீவராசிகள் துறைசார் பணிகளின் போது வினைத்திறன் வாய்ந்த போக்குவரத்து சேவையை வழங்கும் பொருட்டு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு வாகனம் ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு வரலாற்றில் முதல் தடவையாக ரூபா 200 மில்லியன் ஆன பாரிய தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் கீழ் 04 டபிள் கெப் வண்டிகள் மற்றும் 30 சிங்கல் கெப் வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டு வனசீவராசிகள் வலயங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

**2014 ஆம் ஆண்டின் ஒதுக்கீடு - ரூ.பா 200.00 மில்லியன்**

**நிதி முன்னேற்றம் - ரூ.பா 150.19 மில்லியன்**

## 4. காப்பிட பிரதேசங்களின் வாழ்விட வளப்படுத்தல்

